சுருக்கம்

வருமுன் காப்போம் திட்டம் – தமிழகம் முழுவதும் வருமுன் காப்போம் திட்டம் மீண்டும் செயல்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல ( அஉதி II–2) துறை**

**அரசாணை (நிலை) எண். 135** **நாள்: 10.8. 2006**

படிக்க

(1) அரசாணை (நிலை) எண்.489, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, நாள்.22.1.99.

மீண்டும் படிக்க:–

(2) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் கடிதம் ந.க.எண்.55851/திட்டம்2/உதவி–1/06, நாள்.14.6.06.

*********

ஆணை.

தமிழக சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் 24.5.2006 அன்று ஆற்றிய உரையில், கிராமங்களுக்கு நேரில் சென்று மருத்துவ வல்லுநர் குழுவினர்களால் நடத்தப்பட்டு வந்த“ வருமுன் காப்போம் திட்டம்“ மீண்டும் புதுப்பொலிவுடன் நடைமுறைக்கு வரும் என்று அறிவித்துள்ளார்கள்.

2. வருமுன் காப்போம் திட்டம் பெருவாரியான மக்களுக்கு பயனளித்த சிறப்புமிகு திட்டம் என்றும், 1999 முதல் 2001 வரை தமிழகம் முழுமையிலும் வாழும் மக்கள் அனைவருக்கும் இத்திட்டம் பன்முனை இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சைத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது என்றும், கிராமப்புற, நகர்ப்புற மக்களுக்கு மட்டுமின்றி, சிறைகைதிகளுக்கும் இத்திட்டம் கொண்டு செல்லப்பட்டது என்றும், இத்திட்டத்தில் 89 வகை நோய்கள் பட்டியலிடப்பட்டு, 68 வகை அலோபதி மருந்துகள், 18 வகை சித்த மருந்துகள் மற்றும் நவீன சாதனங்களைக் கொண்டு இம்முகாம்களில் பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்கப்பட்டதெனவும், 7 வகையான ஆய்வக பரிசோதனை முறைகள் செயல்படுத்தப்பட்டது என்றும், 8993 வருமுன் காப்போம் மருத்துவ முகாம்களில் 95,51,401 பேர் நேரடியாக பங்கேற்று பயனடைந்தார்கள் என்றும், தடுப்பூசி திட்டமும் உடன் நிகழ்வாக நிறைவேற்றப்பட்டதென்றும், 2001–க்குப் பிறகு இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லையென்றும் தெரிவித்து தற்போது தமிழகம் முழுவதும் வருமுன் காப்போம் திட்டத்தை செயல்படுத்திட பார்வை இரண்டில் உள்ள கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத்துறை இயக்குநர் செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் தற்போது நடத்தப்பட உள்ள மருத்துவ முகாம்களில் பின்வரும் சிறப்பு மருத்துவ பரிசோதனை சேவைகள் மக்களுக்கு அளிக்கப்படும்:

1. இரத்தம் (எச்.பி) (Hemoglobin) அளவு அனைவருக்கும்

2. இரத்த அழுத்த பரிசோதனை (30 வயதிற்கு மேற்பட்டோருக்கு)

3. இரத்தத்தில் சர்க்கரை (30 வயதிற்கு மேற்பட்டோருக்கு)

4. இரத்தத்தில் கொழுப்பின் அளவீடு

5. மலேரியா இரத்தத்தடவல் பரிசோதனை

6. இ.சி.ஜி.

7. “பாப் தடவல்“ PAP Smear (கர்ப்பப்பை வாய் புற்றுநோய் கண்டறிய)

8. அல்ட்ராசோனாகிராம் கர்ப்பிணிகள் அனைவருக்கும் (மற்றவர்களுக்கும் பரிந்துரையின் பேரில்)

9. கண்புரை ஆய்வு மற்றும் பார்வைக் குறைபாட்டிற்கு இலவச மூக்குகண்ணாடிகள் வழங்குதல்

10. செமி ஆட்டோ அனலைசர் மூலம் பரிசோதனை

மேலும், மருத்துவ வல்லுநர்கள் அடங்கிய சிறப்பு மருத்துவர் குழுவினரால் பொதுமக்களுக்கு குழந்தை நலம், பல் மருத்துவம், கண், காது, மூக்கு, தொண்டை, இருதய நோய் சிகிச்சை, உயர் இரத்த அழுத்த சிகிச்சை, நீரிழிவு நோய் கண்டுபிடிப்பு, புற்று நோய், காசநோய், மகப்பேறு மருத்துவம், சித்த மற்றும் இந்திய மருத்துவம் போன்ற துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்களால் சிறப்பு மருத்துவ வசதிகள் வருமுன் காப்போம் மருத்துவ முகாம்களில் அளிக்கப்படும். அரசு மருத்துவர்களுடன் இந்திய மருத்துவ சங்கம், ரோட்டரி, அரிமா சங்கங்கள், போன்ற தன்னார்வ நிறுவனங்களும் இந்த வருமுன் காப்போம் திட்டத்தில் இணைந்து செயலாற்றும். இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்பட உள்ள சிறப்பு பரிசோதனை வசதிகள், சிறப்பு மருத்துவ வல்லுநர்களின் வருகை ஆகியன குறித்து பொதுமக்களுக்கு பரந்த அளவில் விளம்பரம் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும் என்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து, இம்மாநிலத்தில் வருமுன் காப்போம் திட்டத்தை மீண்டும் வலுவோடும் பொலிவோடும் செயல்படுத்துவது என்று முடிவு செய்து பின்வரும் ஆணைகளை வெளியிடுகிறது:–

i. தமிழகம் முழுவதும் மீண்டும் ‘‘வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ்" நடப்பு 2006–07 மற்றும் 2007–08 ஆம் ஆண்டுகளில், 9000 முகாம்கள் நடத்திட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தை ஒரு தொடர்ச்சியான திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

ii. ஒரு மாவட்டத்தில் வாரத்தில் சராசரியாக மூன்று மருத்துவ முகாம்கள் வீதம் 24 மாதங்களில் மாநிலம் முழுவதும் 30 மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு 300 முகாம்கள் வீதம் ஒரு முகாமுக்கு 900 நோயாளிகள் என்ற அடிப்படையில் 9000 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.

iii. வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ், 9000 முகாம்கள் நடத்துவதற்காகும் செலவினங்களை மேற்கொள்ள, ரூபாய் 18.3040 கோடி (ரூபாய் பதினெட்டு கோடியே முப்பது லட்சத்து நாற்பதினாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. இந்த நிதியிலிருந்து பிற்சேர்க்கை 1ல் உள்ளவாறு செலவினங்களை மேற்கொள்ள ஆணையிடப்படுகிறது.

iv. மேலே பத்தி (iii)ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.18.3040 கோடியில் ரூ.15.73 கோடி (ரூபாய் பதினைந்து கோடியே எழுபத்திமூன்று இலட்சம் மட்டும்) மாநில நிதியிலிருந்தும், உபகரணங்கள் வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள செலவினம் ரூ.2.574 கோடி, (இரண்டு கோடியே ஐந்து இலட்சத்து எழுபத்தி நான்காயிரம் மட்டும்) பேறுசார் நல குழந்தைகள்நலத்திட்ட நிதியிலிருந்தும் செலவினங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

v. திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதற்கான செயல் திட்டம் மற்றும் நெறிமுறைகளை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் வகுத்து, மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட அலுவலர்கள், மருத்துவர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு அனுப்ப அறிவுறுத்தப்படுகிறார்.

**5. (i)** இத்திட்டத்திற்கு மாநில நிதியிலிருந்து ஒப்பளிக்கப்பட்ட நிதி ரூ.15.73 கோடி,(ரூபாய் பதினைந்து கோடியே எழுபத்தி மூன்று இலட்சம் மட்டும்) கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2210 – மருத்துவமும் பொது சுகாதாரமும் – 06 பொது சுகாதாரம் – 101 நோய்களைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும் – II. மாநிலத் திட்டம் பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – JU – வருமுன் காப்போம் திட்டம் – (குறியீட்டு எண்.2210–06–101–JU–0003)

2006 –2007 –ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.11.1340 கோடி ரூபாய் மட்டும் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதத் தொகை ரூ. 4.5960 கோடி அடுத்த நிதியாண்டிற்கான(2007–2008) வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதற்குத் தேவையான கருத்துருவை உரிய நேரத்தில் அரசின் நிதித்துறைக்கு அனுப்பி வைத்திடுமாறு இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம் சென்னை –6 கேட்டக் கொள்ளப்படுகிறார்.

(ii) இத்திட்டத்திற்கான உபகரணங்கள் வாங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூ.2.574 கோடி (ரூபாய் இரண்டு கோடியே ஐந்து இலட்சத்து எழுபத்தி நான்காயிரம் மட்டும்) நிதியை பேறுசார் குழந்தைகள் நலத் திட்டத்திலிருந்து உடனடியாக வழங்குமாறு பேறுசார் மற்றும் குழந்தை நல திட்ட இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**6.** இந்த திட்டம் சுகாதாரத்துறை மட்டுமல்லாது பிற துறைகளின் ஒத்துழைப்போடும் ஒருங்கிணைப்போடும் மிகச் சிறப்பாக செயல்படுத்திடவும், சிறப்பாக செயல்படுத்துவதற்கான உத்திகளை வகுக்கவும், இந்த அரசாணையின் பிற்சேர்க்கை–II, III மற்றும் IV-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அரசுச்செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அவர்கள் தலைமையில் மாநில ஒருங்கிணைப்புக்குழுவும், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாவட்ட செயல்திட்ட குழுவும், வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையில் வட்டார செயல் திட்டக்குழுவும் அமைக்கப்படுகிறது.

**7.** மருந்து, உபகரணங்கள் போன்றவற்றிற்காக ஒப்பளிக்கப்பட்ட நிதியை, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் கீழ்க்கண்ட வைப்புத் தொகை கணக்கில் செலுத்துமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் மற்றும் பேறுசார் மற்றும் குழந்தைகள் நல திட்ட இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

‘‘ K. Deposits and Advances - ( b) Deposits not bearing interest - 8443 - 00. civil deposits - 800 - Other deposits - AE - Deposits of Government Companies, Corporations etc. 66 deposits of T.N.M.S.C. Ltd., (D.P.code 8443-00-800-AE-6600-D) Deposits"

இத்திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட உபகரணங்கள் மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் மூலம் வாங்கப்படவேண்டும். இத்திட்டத்தின் நடைமுறை முன்னேற்றம் குறித்து பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்குநரகத்தில் தொகுக்கப்பட்டு, 15 நாட்களுக்கு ஒருமுறை அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.240 / து.செ (நிதி) . சு–1 / 2006, நாள் 7.8.2006 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வி.கு. சுப்புராஜ்**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்குநர், சென்னை–6
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–6
குடும்ப நலத்துறை இயக்குநர், சென்னை–6
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10
மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை இயக்குநர், சென்னை–6
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, இயக்குநர் / ஆணையர், சென்னை –106
தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகம், சென்னை–8
தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை இயக்குநர், கிண்டி, சென்னை–32 மற்றும்
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் கீழுள்ள அனைத்துத் துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–18,
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர் (தெற்கு) சென்னை–35
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
நகல்.
முதலமைச்சரின் செயலர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
முதலமைச்சரின் செயலகம், சென்னை–9
தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைச் செயலர்கள்,சென்னை.9

தலைமை செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகள், சென்னை—9
மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை—9
அனைத்துத் துறை அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்கள், சென்னை—9
ஆளுநரின் செயலர், ஆளுநர் அலுவலகம், கிண்டி, சென்னை—22
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், தலைமைச் செயலகம்,சென்னை.9
நிதி (சுகாதாரம்.I/வ.செ.I &II/CMPC) துறை, சென்னை—9
அரசு விவர வகைப்பாட்டு மையம், சென்னை—25
மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை—9
மக்கள் நல்வாழ்வுத்துறைச் சிறப்புச் செயலரின் தனிச் செயலர், சென்னை—9
இ.கோ / உதிரி.

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

## பிற்சேர்க்கை – I

<u>செலவினம் ஒப்பளிக்கப்பட்ட விவரம்</u>

| வ. எண். | செலவின விவரம் | எண்ணிக்கை மற்றும் விலை விபரம். | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மருந்துகள் (Drugs) (ஒரு முகாமுக்கு ஒதுக்கப்படும் ரூ.8100/– இல், ரூ.1000/– சித்த மருந்திற்கும், ரூ.500/– ஆய்வுக்கூட வேதியல் பொருள்களுக்கும் (Lab Reagents) ஒதுக்கப்படவேண்டும்.) | ரூ.9x900x9000 முகாம்கள் | 729.00 |
| 2 | எரிபொருள் (Fuel) (வட்டார மருத்துவமனையில் ஏற்கனவே உள்ள வாகனங்களைத் தவிர, முகாம்களுக்காக பயன்படுத்தப்படும் 5 வாகனங்களுக்கு தலா 20 லிட்டர் எரிபொருள் வழங்கலாம்). | ரூ.1750x9000 முகாம்கள் | 157.50 |
| 3 | படிவங்கள் (Forms) | ரூ.1000x9000 முகாம்கள் | 90.00 |
| 4 | தகவல், கல்வி, தொடர்பு (Information, Education, and Communication) | ரூ.1250x9000 முகாம்கள் | 112.50 |
| 5 | உணவு மற்றும் பிற வகைகள் (Food and other arrangements) | ரூ.4500x9000 முகாம்கள் | 405.00 |
| 6 | மருத்துவ வல்லுநர்கள் மதிப்பூதியம் (specialists) | ஒட்டுமொத்தம் | 30.00 |
| 7 | துண்டு பிரசுரம் மற்றும் சிற்றேடுகள் (pamphlets brochures) | ஒட்டுமொத்தம் | 27.50 |
| 8 | விழிப்புணர்வு ஏற்படுத்த (Sensitisation) | ஒட்டுமொத்தம் | 1.00 |
| 9 | புறநோயாளிகள் சீட்டு (OP - Tickets) | ஒட்டுமொத்தம் | 5.00 |
| 10 | பதாகைகள் (Banners) | ஒட்டுமொத்தம் | 5.00 |
| 11 | மதிப்பீடுகள் (Evaluation) | ஒட்டுமொத்தம் | 5.00 |
| 12 | ஒருங்கினைப்பு (Monitoring) | ஒட்டுமொத்தம் | 3.50 |
| 13 | உபகரணங்கள் (Equipments) | | |
| | (i)இரத்த அழுத்தமானி (BP apparatus) | ரூ.600x10 x90 | 5.40 |
| | (ii)புற ஊதா ஒளி கருவி (Ultra Sound Scanner) | ரூ.280x90 எண்கள் | 252.00 |
| 14 | சோதனைக்குழாய்கள் மற்றும் கண்ணாடி வில்லைகள் (Test Tubes and slides) | ஒட்டுமொத்தம் | 0.50 |
| 15 | சிறுநீரக தட்டு (Kidney Tray) | ஒட்டுமொத்தம் | 0.50 |

| | | | |
|---|---|---|---|
| 16 | Speculum | ஒட்டுமொத்தம் | 1.00 |
| | | **மொத்தம்** | **1830.40** |

**வி.கு. சுப்புராஜ்**
**அரசு செயலாளர்.**

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

**பிரிவு அலுவலர்**

## பிற்சேர்க்கை – 2

**மாநில ஒருங்கிணைப்புக்குழு**

| வ. எண். | பதவியின் பெயர் | |
|---|---|---|
| 1 | அரசு செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை | தலைவர் |
| 2 | இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை | உறுப்பினர்– செயலாளர் |
| 3 | அரசின் சிறப்புச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை | உறுப்பினர் |
| 4 | மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம் | உறுப்பினர் |
| 5 | திட்ட இயக்குநர், பேறுசார் மற்றும் குழந்தை நலத்திட்டம் | உறுப்பினர் |
| 6 | திட்ட இயக்குநர், தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாட்டு சங்கம் | உறுப்பினர் |
| 7 | திட்ட ஒருங்கிணைப்பாளர் WBICDS | உறுப்பினர் |
| 8 | இயக்குநர், மருத்துவக்கல்வி இயக்ககம் | உறுப்பினர் |
| 9 | இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் | உறுப்பினர் |
| 10 | சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவம் | உறுப்பினர் |
| 11 | இயக்குநர், கண்பார்வை இழப்பு தடுப்பு நிறுவனம் | உறுப்பினர் |
| 12. | மாநில காசநோய் அலுவலர் | உறுப்பினர் |

இந்த மாநில ஒருங்கிணைப்புக்குழு, 3 மாதங்களுக்கு ஒருமுறை கூடும். மாநிலமெங்கும் நடைபெறும் வரு முன் காப்போம் திட்ட முகாம்களுக்கு தேவையான திட்டமிடுதலையும் கொள்கை முடிவுகளையும் அரசாங்க அளவில் நடைபெற வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் இக்குழு விரைவுபடுத்தும். மேலும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கு வரு முன் காப்போம் திட்ட முன்னேற்றத்தை, பின்னூட்ட விளைவுகளை அவ்வப்போது இக்குழு சமர்ப்பிக்கும்.

**வி.கு. சுப்புராஜ்**
**அரசு செயலாளர்.**

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

**பிரிவு அலுவலர்**

## பிற்சேர்க்கை – 3

## மாவட்ட செயல் திட்டக்குழு

| வ. எண் | பதவியின் பெயர் | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியாளர் | தலைவர் |
| 2 | துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) | உறுப்பினர் செயலாளர் |
| 3 | இணை இயக்குநர் / துணை இயக்குநர் (மருத்துவம்) மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் | உறுப்பினர் |
| 4 | முதல்வர், மருத்துவக்கல்லூரி | உறுப்பினர் |
| 5 | முதன்மை கல்வி அலுவலர் | உறுப்பினர் |
| 6 | திட்ட அலுவலர்–மாவட்ட வளர்ச்சி முகமை | உறுப்பினர் |
| 7 | செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் | உறுப்பினர் |
| 8 | நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து) | உறுப்பினர் |
| 9 | இந்திய மருத்துவசங்க மாவட்ட தலைவர் | உறுப்பினர் |
| 10 | மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யும் இரு தன்னார்வ அமைப்புகளின் பிரதிநிதிகள் | உறுப்பினர் |
| 11 | மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் | உறுப்பினர் |
| 12 | மாவட்ட காச நோய் அலுவலர் | உறுப்பினர் |

<u>குழுவின் பணிகள்</u>

1. இந்த மாவட்ட குழு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூடி அடுத்து வருகின்ற மாதங்களில் முகாம்கள் நல்ல முறையில் நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

2. அந்தந்த மாவட்டங்களில் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், இணை இயக்குநர் மருத்துவப் பணிகள் மற்றும் துணை இயக்குநர் மருத்துவப் பணிகள் ஆகியோர் இணைந்த அந்தந்த சுகாதாரப்பகுதி மாவட்ட செயல் திட்டத்தை தயாரிக்க வேண்டும். இந்த செயல்திட்டமானது துணை இயக்குநர் சுகாதாரப்பணிகளால் தொகுக்கப்பட்ட மாவட்ட திட்டமாக மாவட்ட ஆட்சியாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. மாவட்ட ஆட்சியாளர் இத்திட்டத்தின் ஒரு நகலை அரசுக்கும் மற்றொரு நகலை இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை அவர்களுக்கும் அனுப்ப வேண்டும்.

4. பிற அரசுத்துறைகளின் பங்களிப்பு, அரசு சாரா நிறுவனங்களின் ஒத்துழைப்பு, விளம்பர பிரச்சார நடவடிக்கைகள், கணிணி வழி தகவல் பரிமாற்றம், புள்ளி விவர சேகரிப்பு, நிர்வாக நடவடிக்கைகள், பயிற்சிகள், கூட்டங்கள், வரவு செலவு, ஆவணமாக்கம் மற்றும் இன்ன பிற பணிகளை தீவிரப்படுத்தி இத்திட்டம் செவ்வனே செயல்பட தேவையான அனைத்து பணிகளையும் மாவட்ட அளவில் இக்குழு மேற்கொள்ள வேண்டும்.

5. மாவட்ட அளவில் தனியார் தொலைக்காட்சி, செய்தி அறிக்கை, திரைப்பட ஸ்லைடுகள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், போன்றவற்றை பயன்படுத்தி விளம்பரம் செய்யலாம். இதற்கு மாவட்ட மக்கள் கல்வி மற்றும் தகவல் தொடர்பு அலுவலர் மற்றும் மாவட்ட விரிவாக்க கல்வியாளர்கள் பொறுப்பாவார்கள்.

வி.கு. சுப்புராஜ்
அரசு செயலாளர்.

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

**பிற்சேர்க்கை–4**

**வட்டார செயல் திட்டக்குழு**

| வ. எண் | பதவியின் பெயர் | |
|---|---|---|
| 1 | வட்டார வளர்ச்சி அலுவலர் | தலைவர் |
| 2 | வட்டார அளவிலான மருத்துவ அலுவலர் (Block Level Medical Officer) | உறுப்பினர் செயலாளர் |
| 3 | மருத்துவ அலுவலர்கள் (கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்) | உறுப்பினர் |
| 4 | வட்டார விரிவாக்க அலுவலர் | உறுப்பினர் |
| 5 | வட்டார சுகாதார மேற்பார்வையாளர் | உறுப்பினர் |
| 6 | சமுதாய சுகாதார செவிலியர் | உறுப்பினர் |
| 7 | வட்டார புள்ளியியல் உதவியாளர் | உறுப்பினர் |

**குழுவின் பணிகள்**

1. வட்டார அளவில் நடைபெறும் ஒவ்வொரு முகாமிற்கு தேவையான ஏற்பாடுகளை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் மற்றும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். வட்டார அளவில் இத்திட்டம் குறித்து பரந்த அளவில் விளம்பரம் செய்ய வேண்டும். மருத்துவ முகாம் குறித்த சிறு வெளியீடு ஒன்றை வெளியிட்டு பொது மக்களுக்கு விநியோகிக்க வேண்டும். அதில் முகாம் நடைபெறும் நாள், இடம், சேவைகள், வசதிகள் ஆகியன குறித்து விவரங்கள் இருக்க வேண்டும்.

2. வட்டார அளவில் இயங்கும் அரசு துறைகளின் ஒத்துழைப்பை பெறுவதுடன், அரசு சாரா நிறுவனங்களையும் இம்முகாமிற்கு ஒத்துழைக்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொர முகாமின் முடிவிலும் அறிக்கைப்படிவம் முகாம் நடைபெற்ற இடத்திலேயே முகாம் நடைபெற்ற நாளன்று கணிப்பொறி வாயிலாக பூர்த்தி செய்து இயக்குநரகத்திற்கும் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகளுக்கும் அனுப்பவேண்டும்.

வி.கு. சுப்புராஜ்
அரசு செயலாளர்.

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்